ஓர் ஒப்பற்ற விடுதலைப்பயணத்திற்... தன்னை
ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் ...... இந்தக் காலகட்டத்திற்கூட ......
எமது விடுதலைப் போராட்டத்தின் ...... பக்க விளைவுகளையும் ......
நெளிவு ...... சுளிவுகள், நெருக்க ...... சுருக்கங்களையும், தமக்கு சாதகமாக்கி ......
எமது இனத்தின் ...... கண்ணீரையும், குருதியையும் ......
தமது சுயநலப்பயண்த்திற்குப் பலியாக்கும்......
சந்தர்ப்பவாதிகளையும் ...... நாம் இனம்கண்டு கொண்டு ......
அவர்களது ...... போக்கினைக்கண்டித்து ......மாற்றவேண்டிய
கடமையும் ...... உரிமையும் ...... நம்மீது-சுமத்தப்பட்டுள்ளது ......

இன்றைய போலித்துவக்குகளே ......
நாளைய கூலித்துவக்குகளாக ...... மாறக்கூடியவை ......
என்பதை ...... நாம் நெஞ்சத்தில் நிறுத்திட வேண்டியுள்ளது!
வேலியே ...... பயிரை ...... மேய்வது போன்ற ......
கேலித்தனத்திற்கு ...... நமது விடுதலைப்போராட்டம் ......
வழிவிடக்கூடாதென்ற ......
ஒரு முன்னெண்ணம் எமக்கு ...... என்றும் இருக்கவே செய்கிறது ......

தரை ......கடல் ......மார்க்கப்போராட்டத்திற் ......தாக்குப் பிடிக்கமுடியாத ......
எமது பகைவன், விண்வெளித் தாக்குதல்களில் ஈடுபட்டிருக்கும். ......
இந்த வேளையிலும்கூட ......
எமது போராட்டத்திற்கு ...... முட்டுக்கட்டைகளாக இருந்துகொண்டு ......
எமது இனத்தின் நிதியையும் ...... சக்தியையும் ...... ஆதரவையும் ......
ஆற்றலையும் ...... விரயஞ்செய்து ...... பாழடிக்கும் ......
பலவீனர்களையும் ...... போலித்துவக்குகளையும் ......
எமது இனம் ......முற்று ...... முழுதாக ......
இனம் கண்டு கொள்ளுமாயின்.
நாளை கிடைக்கப்போகும் விடுதலையை ......
எமது இனம் ...... இன்றே ...... பெற்றிடமுடியும் ......

இந்த எண்ணத்தைப் பிரதிபலிக்கும் ......
போலித்துவக்குகள் நாடகத்தின் ஒரு பாத்திரம் ......
பேசும் வரிகள் சில ......

www.padippakam.com

துப்பாக்கி ...... ஏந்திய ...... இராணுவக்கூலியைவிடப் ......
பலவீனம் நிறைந்த ஒரு தந்தை பயங்கரமானவன் ......
படிப்பிப்பதற்கு ...... ஊதியம் பெற்றுக்கொண்டு ......
படிப்பிக்காமல் வகுப்பறையிற் தூங்கும் ...... ஆசிரியன் பயங்கரமானவன் ......

தொழிலால் ...... மதத்தால் ...... இடத்தால் ...... எமது இனத்தைப்
பிளந்து ...... பிரித்துக்..... குளறுபடிசெய்யும் ...... உலுத்தர்கள். ......
பயங்கரமானவர்கள் ......

ஆட்சியை ...... ஆந்தைகளின் காடாக்கி ...... இனத்தை ...... அறிவீனத்தின்
களமாக்கி ...... வீழ்ச்சியில் எமது இனத்தினை ...... வீழ்த்திடக்
கூடிய ...... அரசியல்வாதிகள் பயங்கரமானவர்கள் ......

நன்றி

**தமிழீழ விடுதலைப்புலிகள்**
**கலாச்சாரப் பிரிவு,** பிரித்தானியக்கிளை

**புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்.**


# UNITY COLLEGE

81-89 Fortess Road, Kentish Town, London NW5 1AG
Tel: 01-482 3349

**YOU CAN ACHIEVE SUCCESS IN HIGHER EDUCATION**
**UNITY COLLEGE OFFERS YOU:**

COMMITMENT TO HIGHEST EDUCATIONAL STANDARDS
HIGHLY QUALIFIED AND EXPERIENCED LECTURERS
INDIVIDUAL ACADEMIC SUPPORT
PLEASANT AND CARING ENVIRONMENT
FEES YOU CAN AFFORD
LOCATIONAL ADVANTAGE

SOME OF OUR COURSES ARE:

ACCOUNTANCY AND MANAGEMENT
ASSOCIATION OF ACCOUNTING TECHNICIANS
ASSOCIATION OF CERTIFIED ACCOUNTANTS

| DURATION | 3 TERMS | 2 TERMS | 1 TERM |
|---|---|---|---|
| FEE PER SUBJECT | £130 | £90 | £60 |

BANKING- THE INSTITUTE OF BANKERS
IOB STAGE 1 INTERNALLY EXAMINED
IOB STAGE 2

| DURATION | 2 TERMS | 1 TERM |
|---|---|---|
| FEE PER SUBJECT: IOB1 | £600 | --- |
| FEE PER SUBJECT: IOB2 | £170 | £150 |

INSTITUTE OF COSTS & MANAGEMENT ACCOUNTANTS
ASSOCIATION OF BUSINESS EXECUTIVES
INSTITUTE OF ADMINISTRATIVE MANAGEMENT

MARKETING
INSTITUTE OF MARKETING

| CAM FOUNDATION: | 3 TERMS | 2 TERMS | 1 TERM |
|---|---|---|---|
| FEE PER SUBJECT | £120 | £80 | £150 |

ENGLISH LANGUAGE
FOUNDATION - ELEMENTARY - INTERMEDIATE

| DURATION: | 3 TERMS | 2 TERMS | 1 TERM |
|---|---|---|---|
| FEE PER COURSE | £450 | £300 | £150 |

WRITE OR TELEPHONE FOR YOUR PROSPECTUS AND ENROLMENT FORM TO THE REGISTRAR


படிப்பகம்

www.padippakam.com

# நல்ல நேரம்

தமிழீழப் போராட்டத்தில் ஒரு புதிய விதியினைச் செய்து வருகின்ற விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் இலைமறை காய்களாக உள்ள தமிழ் மாணவ, மாணவிகளின் கலைத் திறமைகளை வெளிக்கொண்டு வரும் முகமாக மாணவக் கலைஞர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்து நல்ல நேரம் என்ற இசை நிகழ்ச்சியினை நடாத்த வருகின்றனர். தமிழக மாணவ மாணவிகளும் தமிழீழ மாணவர்களும் இணைந்து வழங்கும் இந் நிகழ்ச்சி விடுதலைப்புலிகளின் மாணவர் இயக்கத்தின் பூரண கட்டுப் பாட்டின் கீழேயே மேடையேற்றப்பட்டு வருகின்றது.

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் வழங்கும் நல்லநேரம். அனைத்துக் கல்லூரி முன்னணிக் கலைஞர்களும் இணைந்து வழங்கிய மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி.

நடந்த இடம்: ராமராவ் கலை மண்டபம்,
40, கபி பில்லா வீதி
தி. நகர்.

காலம்: 29.3.86 சனி மாலை 5.30 மணி

சிறப்புற நடைபெற்ற இவ் இன்னிசை நிகழ்ச்சி மீண்டும் மேமாதமளவில் மதுரையிலும் பின்பு, திண்டுக்கல், திருச்சி ஆகிய இடங்களிலும் நிகழ்த்தப்படவுள்ளது.

இவ் இன்னிசை நிகழ்ச்சிக்கு, 1985ம் ஆண்டு விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தின் திரை இசைத் திருவிழா இசை நிழ்ச்சியினை அமைத்துத்தந்த திரு. கங்கை அமரன் அவர்களை கௌரவ விருந்தினராக அழைத்து அவருக்கு விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தின் சார்பில் அடையாளச் சின்னம் ஒன்றும் வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| Organ | Balraj | Loyola College |
| Guitar | Ravikumar | Presidency College |
| Guitar (base) | Joshua | Loyola College |
| Rhythm | Shankar | Guindy Engineering College |
| Drums | Suresh | Presidency college |
| Bongos | Thamil venthan | Loyola College |
| Dabala | Martin | Loyola College |
| Vocalists | Anantha kumar | Guindy Engineering College |
| | Ravi kumar | Presidency College |
| | Haribaskar | A.c Technical College |
| | Antony | Loyola College |
| | Rajenthira kumar | Loyola college |
| | Vickna rajah | Loyola College |
| | Muhunthan | Loyola College |
| | Rama | Madras Medical College |
| | Jeyanthi | Gujarath College |
| | Ranjini | Stella Mary's College |
| | Balasubra maniam | Loyola College |

Co-ordinators
___Rajiv
Nithianantha

படிப்பகம்

www.padippakam.com


**Oxford International CENTRE Resource & Advice**

**Patron**: Prince Ravi-Varma

Established 1981

DIRECTOR: P. Mylvaganam, esq.

International House, 10 Harefields, Banbury Road,
Summertown, Oxford OX2 8NS

EXPERT ADVISORY SERVICE
FROM
TOP INTERNATIONAL TEAM

PHENOMENAL SUCCESS RATE
IN PROBLEM SOLVING

* INTERNATIONAL LAW
* EDUCATION
* IMMIGRATION & NATIONALITY
* RACE & COMMUNITY RELATIONS
* REFUGEES & REHABILITATION
* WELFARE RIGHTS
* HEALTH & LEISURE
* FINANCE & INSURANCE
* ALL ASPECTS OF ENGLISH LAW
* HUMAN RELATIONS & PERSONAL WORRIES



# WITH COMPLIMENTS

**SERANA LIMITED**

LINKSWAY HOUSE
1A LINKS ROAD
LONDON SW17.

TEL: 01-416 0739
01-684 2733


படிப்பகம்

www.padippakam.com


# 6 KUMARS

எல்லாவிதமான பாடல் கேசட்டுகள், வீடியோ டேப்புகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் எங்களிடம் கிடைக்கும். வீடியோ டேப்புகள் வாடகைக்கும் எங்களிடம் கிடைக்கும்.

எல்லா நிகழ்ச்சிகளுக்கும் வீடியோபடம் நவீன முறையில் கேமரா மூலம் பதிவு செய்து தருகின்றோம்.

6 KUMARS




6 KUMARS

WHOLESALE & RETAIL IN ALL KINDS OF AUDIO TAPES & VIDEO TAPES.

VIDEO TAPES FOR RENTAL.

WE DO CAMERA SHOOTING IN VIDEO TAPES FOR VARIOUS FUNCTIONS

HIGH STREET NORTH, MANORPARK
LONDON E12
**TEL : 01 – 471 – 5631.**
(NEAREST TUBE EASTHAM)


படிப்பகம்

www.padippakam.com

# வாழ்த்துச் செய்திகள்

## விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

## Student Organization of Liberation Tigers

**தமிழகம்**

தமிழ் மக்கள் மீது வன்முறையையும் ஒடுக்குமுறையையும் கட்டவிழ்த்திருக்கும் சிங்கள இனவாத அரசுக்கெதிராக ஆயுதம் ஏந்திப்போராடும் தமிழீழ விடுதலைப்புலிகள் தீவிரவாதிகளோ பயங்கரவாதிகளோ அல்ல. எமது இனத்தின் தேசிய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் விடுதலைப்போராளிகள். இந்த உண்மையை உலகெங்கும் எடுத்துக்கூறி உலகநாடுகளிடம் தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையினை அங்கீகரிக்குமாறு குரல் கொடுப்பதற்கு தமிழ் மக்களையும் மற்றைய நாட்டு மக்களையும் ஒன்று திரட்டி வரும் அமைப்பே விடுதலைப்புலிகளின் மாணவர் இயக்கம். பிரித்தானியா வாழ் மக்கள் அனைவரும் விடுதலைப்புலிகளின் மாணவர் இயக்கத்தோடு தொடர்பு கொண்டு தமிழீழ மக்களின் உண்மையான போராட்ட வரலாற்றை புரிந்து கொள்வதன் மூலம் உலகநாடுகளின் அங்கீகாரத்தைப் பெற்றுத்தர உழைக்க வேண்டும்.

அடிப்படை உரிமைகளே இல்லாத தமிழீழ மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டியது மனித இனத்து பிரதிநிதியாக உள்ள ஒவ்வொருவரின் கடமையாகும். பிரித்தானியக்கிளை விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் இப்பணியினை சிறப்போடு செய்வதுடன் தமிழ் மக்களது பண்பாட்டையம், கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கும் நோக்கிலும் தமிழ் மக்களது கலை மேற்கினில் பரப்பும் வண்ணம் மேற்கொள்ளும் புலிகளின் புயலிசை போன்ற நிகழ்ச்சிகள் பாராட்டுக்குரியது. இம்மாணவர் இயக்கம் தொடர்ந்தும் கட்டுப்பாட்டுடன் இயங்கி நமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லம் முயற்சிகளில் மேலும் மேலும் வளர்ச்சி பெற வாழ்த்துகிறோம்.

''புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்''

''வெல்க தமிழீழம்''

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் - தமிழகம்.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

பிரான்ஸ் கிளை.

கலை கலைக்காக அன்றி மனிதனுக்காகவே படைக்கப்பட்டது. வரலாற்று ஓட்டத்தில் கலையும், கருவூலங்களும் மாற்றமடைந்தே வருகின்றன. இந்த 20 ம் நூற்றாண்டின் இறுதிக்காலப்பகுதியில் கலையானது அதிகார வர்க்கத்தினரின் அடக்குமுறைகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்குமெதிராக குரல் எழுப்பி வருகிறது. இந்தவகையில் தமிழீழத்தின் ஆயுதப்புரட்சியினை முழுமையான விடுதலைக்காய் எடுத்துச் செல்லும் பணியில் விடுதலைப்புலிகளின் கலாச்சாரப்பிரிவு புதியதோர் அத்தியாயத்தை ஏற்படுத்தி வருகின்றது.

தமிழ் மக்கள் மத்தியில் வேரூன்றி உள்ள முதலாளித்துவ பெறுமதிகளை ஆயுத பலாத்கார வழியிலன்றி, அடித்து விரட்ட முனைந்து வருகிறது விடுதலைபுலிகளின் கலாச்சாரப் புரட்சி. தமிழீழத்தில் இக்கலாச்சாரப் புரட்சியினை முன்னெடுத்துச் செல்கின்ற பிரிவினர்களாக மாணவர்கள் அமைகின்றனர். வரலாற்றுச் சக்கரத்தின் அச்சாணிகளாக அமைந்த ஒரு விதி செய்து புதுயுகம் காணப் புறப்பட்டுவிட்ட இம்மாணவர்களில் ஒரு பகுதியினரான விடுதலைப் புலிகள் மாணவ் அமைப் பின் பிரித்தானியக் கிளையினரால் கலாச்சார நிகழ்ச்சி ஒன்று நடாத்தப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

இக்கலாச்சார நிகழ்ச்சி பிரித்தானிய வாழ் தமிழீழ மக்களிடையே ஒவ்வொருவரும்-தமிழன் என்ற பிறப்புணர்வின் அடிப்படையில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்ற கடமைமை வெளிப்படுத்தி முதலாளித்துவ பெறுமானங்களையும், மேற்குலக மோகங்களையும் முதுகில் சுமந்து கொண்டு திரியும் மானிடர்களின் எண்ணங்களிலும் தாக்கங்களை எற்படுத்துமென நம்புகின்றோம்.

மேலும் வெளிநாடு ஒன்றில் விததுலைப் போராட்டத்திற்கான பணிகளை திறமையாகச் செயற்படுத்தும் விடுதலைப் புலிகளாய் மாணவர் அமைப்பின் பிரித்தானியக் கிளையினரால் நடாத்தப்பெறும் இக்கலாச்சார நிகழ்ச்சி சிறப்புற வாழ்த்துகின்றோம்.

தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் பிரான்ஸ் கிளை.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

மேற்கு ஜேர்மன் கிளை.

கரிகாலன் குறி வைத்தால் தவறுது. பிரபாகரன் குறிவைத்தால் பிழைக்காது என்னும் சரித்திர நிகழ்வுகளுடன் சங்கமித்துக்கொண்டிருக்கும் தமிழ் ஈழப் போராட்டப்பவனியில் புலிகளின் புயலிசை ஓர் புகழ் பவனி சரிதையாக வேண்டும் என்ற இலக்குடன் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் மேற்கு ஜேர்மனி கலாச்சார பிரிவினர் பாடல்களை இலட்சிய கோர்வையாகக் கோர்த்து இன்னிசை தேனைக்கலந்து அதனிலே வார்த்து எங்கள் தலைவர் பிரபாகரனின் தியாக மெழுகு விளக்கின் வழியை எம்மவர்கள் உணர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் புரட்சிப்பணியில் அணி கலந்து தேசியம் காக்கும் நிதிதனை ஈந்து நமது செந்நீரையும், கண்ணீரையும் துடைக்க
முன்னெழுந்து வரவேண்டும் என்ற முனைப்புடனும் தமிழரின் பாரம்பரிய கலை, இலக்கிய, கலாச்சாரப் பண்பாடுகள் காக்கப்படவேண்டும் என்ற நினைப்புடனும் நடாத்துகின்ற இந்நிகழ்ச்சியை விடுதலைப்-புலிகள் மாணவர் இயக்க லண்டன் கிளையினர் எதிர்வரும் 13:4:86 இல் லண்டன் மாநகரிலே எதிரொலிக்க வைப்பதையிட்டு நன்றி கூறுவதுடன் இந்த விழா சிறப்படைய எமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்

புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம் — தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கு ஜேர்மன் கிளை.

---

அயர்லாந்து தமிழ் மாணவர் சங்கம்
தேசிய பாதுகாப்பு நிதிக்காக
தமிழீழ விடுதலைப்புலிகள்
வழங்கும்
கலைமாலை நிகழ்ச்சி
இனிதாகவும், வெற்றிகரமாகவும்
நடைபெற
மனதார வாழ்த்துகிறது.

புலிகளின் பயணங்கள் விடுதலைப்பாதையில் தொடரும் அஞ்சல் ஓட்டம் மாதிரி ஒரு இளம்புலியின் வீர மரணம்அதன் தியாகச்சுடர் மற்றைய இளம்புலிகளின் போராட்டத்தீயை மேன்மேலும் வலுக்கச் செய்யும். நானும் ஓடுவேன், நானும ஓடுகிறேன் என்பவர்களும் ஓடட்டும், முயற்சிக்கட்டும். எங்கள் பாதையில் குறுக்கிட வேண்டாம் அன்பர்களே மக்கள் விழித்துவிட்டார்கள், உணர்ந்து கொண்டார்கள். அதுவே எங்கள் சக்தி. எங்கள் தலைவரும், அவர் கொண்ட கொள்கையும், எங்கள் இயக்கமும், இலட்சியமும் மேன்மேலும் வலுப்பெற மீண்டும் வாழ்த்தும், சேவைக்கு என்றுமே காத்திருக்கும்!

அயர்லாந்து தமிழ் மாணவர் சங்கம் அயர்லாந்து குடியரசு.

படிப்பகம்

www.padippakam.com

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாணவர் இயக்கத்தின் லண்டன்கிளை அமைப்பு நடாத்தும் கலைமாலைக்கு எமது வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறோம் - கடமை கண்ணியம், கட்டுப்பாடு என்னும் கோட்பாடுகளுடன் விடுதலைப்போரை வெற்றிகரமாக தலைவர் பிரபாகரன் தலைமையில் எமது இயக்கத்தினர் எடுத்துச்செல்கின்றனர். எமது தாயகத்தில் இருந்து எதிரியை விரட்டியடிக்கும் பணியில் மட்டுமன்றி எமது மக்களை பாதுகாத்து எமது மக்களின் நன்மதிப்பைப் பெற்று மக்களோடு மக்களாக இணைந்து மக்களின் கொள்கைகளை விளக்கத்தோடு அறிந்து மக்களின் இயக்கமாக பரிணமித்து தொடர்ச்சியாக போராட்டத்தை நடத்துகின்றனர் விடுதலைப்புலிகள்.

இச்சமயத்தில் தமிழீழ விடுதலைக்கென தம்முயிரையே அர்ப்பணம் செய்த 180 க்கு மேற்பட்ட விடுதலைப்புலிகளுக்கு எமது வீர வணக்கத்தையும் அஞ்சலியையும் செலுத்தும் அதே வேளையில் கொள்கை விளக்கத்துடனும், கட்டுப்பாட்டுடனும் மக்கள் இயக்கத்தை நடாத்திச்செல்லும் எமது தலைவர் வே. பிரபாகரன் அவர்கட்கும் தமிழ ஈழத்தில் உயிரை துச்சமென மதித்து போராடும் ஆயிரக்கணக்கான விடுதலைப்-புலிகளுக்கும் எமது அன்புமரியாதையையும் செலுத்துகின்றோம்.

தமிழ் ஈழ விடுதலைப்போராட்டம் ஆரம்பமாகி 12 வருடங்களுக்கு மேலாகிவிட்டநிலையில் இரண்டாவது தலைமுறை விடுதலைப்போராட்டத்தில் நுழையும் காலகட்டத்தை அடைந்துள்ளோம். காலத்தின் போக்கில் அமைப்பின் வளர்ச்சிக்கும் புத்துணர்வை ஊட்டி அமைப்பு வெற்றிகரமாக இயங்குவதற்கு இளம் தலைமுறையினரின் ஈடுபாடும், ஒத்துழைப்பும் மிகவும் அவசியமாய் இருக்கிறது. இப்பணியை தமிழீழத்திலே வாழும் இளம் தலைமுறையினர் மட்டுமின்றி உலகம் அனைத்திலும் பரந்து வாழும் தமிழ் இளைஞர்கள் அனைவரும் தம் பணியினை ஏற்று இயங்கவேண்டும். இக்கடமையைச் செவ்வனே நடாத்தும் விடுதலைப்புலிகளின் மாணவர் இயக்க லண்டன்கிளை அங்கத்தினர்க்கும் லண்டன் வாழ் தமிழ் மக்கள் அனைவரும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்குவார்களென நம்புகின்றோம். விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க லண்டன் கிளையின் சேவை தொடர எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்

தமிழீழ விடுதலைப்புலிகள், விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம்-
அமெரிக்க கிளை.

படிப்பகம்

www.padippakam.com

உழவ தென்றலே இன்னும் உறக்கமா?
எங்கள் பூமியின் வரட்சி பாரடா!

விளையும் பூமியின் ஈரம் மறைந்ததா?
உங்கள் பசுமையின் புரட்சி காட்டவா?

வேங்கை மைந்தர்கள் வீரம் தெரியுதா?
வீரம் செறிந்த அவர் தீரம் புரியுதா?

தூர நின்ற நிலை தூர விலகவே!
நேரம் ஏதுமில்லை நீயும் செல்லடா!

அன்னை பூமி தமிழீழம் கயவரின் மன்மை கண்டு
நிலை கலங்கும் வேளையில்
உன்னை பெற்றதாய் உயிரைக் காக்கவா!

பிள்ளை என்று நீ பின்பும் சொல்லவோ?
பணிந்து வாழ்ந்தும் பயனின்றிப் போனது!

களத்தில் புலிக்கொடி நிமிர்ந்து ஆடுது!
உழைப்புத் துணிவுடன் நீயும் சென்றிடு!

உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள்
உணர்ந்துவிட்டனர் பணியைத் தொடர்ந்திட!
விடுதலை கொண்ட மாணவர் அமைப்பின்று
விரைந்து செல்கிறர் போர்க்கொடி தூக்கிட!

தமிழர் நலன்புரி செயல்கள் புரிந்திடும்
தனயர் டென்மார்க்கில் செய்தி கேட்டதும்
உளமே காணுவோம் தமிழீழ நாட்டிலே

புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்
நன்றி

தமிழர்நலன்புரி மன்றம்
டென்மார்க்.

படிப்பகம்

www.padippakam.com

சிங்கள பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான வீர மிகு தமிழ்ஈழ மக்களின் விடுதலைப்போராட்டமானது ஒரு அரசியல் போராட்டத்தின் அதி உயர் வடிவமாகிய ஆயுதப்போராட்டமாக பரிணும வளர்ச்சி பெற்றுள்ளது. கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக ஒப்பற்ற பல உயிர்த்தியாகங்களினூடாகவும் உயிர்ந்த, இலட்சியம், பற்று, ஒழுக்கம், நேர்மை என்னும் உணர்வுகளின் பலனுகவும் படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ள தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இன்று தமிழ் ஈழ மக்களினதும், - உலகெங்கிலும் வாழும் தமிழ் தேசாபிமானிகளினதும் பரிபூரண ஆதரவையும் பங்களிப்பினையும் பெற்றுள்ளதோடு தமிழீழ விடுதலையை நோக்கி வீறு நடை போடும் இலட்சிய சுடராக, நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்கின்றனர்.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை ஆக்கிரமித்து அப்பாவித்தமிழ்மக்களை அவர்களது சொந்த மண்ணிலேயே கொன்று குவித்து அகதிகளாக்கி திட்டமிட்டதோர் இன ஒழிப்பில் ஈடுபட்டுவரும் சிங்கள இனவெறி அரசின் ஏவற்படைகள் மீது தீர்க்க தரிசனத்துடன் சரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கெரில்லா போர் முறையில் தொடர்ச்சியாக இடைவிடாது தாக்குதல்களை நடாத்தி அரசகூலிப்படைகளை பெருமளவில் அழித்ததன் மூலம் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் தமிழ் ஈழப்பகுதிகள் மீதான சிங்கள அரசின் சிவில் நிர்வாகத்தை முற்ருக நிர்மூலமாக்கி உள்ளனர். மேலும் அவர்கள் போராட்டத்திற்கு சமாந்தரமாக தமிழ் ஈழத்தின் எதிர்காலப் பொருளாதார நிலைகளையும் வளர்த்தெடுப்பதற்கு திட்டமிட்டு புதிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளதோடு கைத்தொழில் உற்பத்தித்-திட்டங்கள் பலவற்றையும் அமுல்படுத்தி போராட்டகாலத்தில் ஏற்படும் நெருக்கடிகளில் இருந்து தமிழ் ஈழ மக்களைப் பாதுகாக்கும் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு உள்ளனர். ஒரு முழுமையான மக்கள் இயக்கமாக முதிர்ச்சி அடைந்துள்ள தமிழ் ஈழ விடுதலைப்புலிகள், மக்கள் அமைப்புக்கள் பலவற்றினூடாக தமிழ் பேசும் மக்களை அரசியல் மயப்படுத்தி வருகின்றனர். இவ்வகையில் விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் விடுதலைப்போராட்டப் பாதையில் தமிழ் ஈழ மாணவர்களை அணிதிரட்டுவதுடன் எமது போராட்டத்திற்கு ஆதரவைத்திரட்டும் பணியில் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர். இப்புனிதப்பணியினை தொடர விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தின் பிரித்தானியக்-கிளையினருக்கு எமது நல்லாசிகளை தெரிவிப்பதுடன் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் நிகழ்ச்சியான கலை மாலை சிறப்புடன் அரங்கேற எமது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்ரும்.

புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரித்தானியக்கிளை

படிப்பகம்

www.padippakam.com

எங்கள் தங்கமணித் தமிழ் ஈழத் திருநாட்டில் , எங்கள் மண்ணினதும் மக்களினதும்
விடுதலையை முன்னெடுத்து பொங்கி வரும் விடுதலைப் புலிகளின் பாதையிலே
இலண்டன் புலிகளின் கலைமாலை ஒரு பொன்மாலைத்தூ தாகட்டும்

செங்களத்தின் மீது நின்றே சிங்கள படையினை ,
சிதறடிக்கும் புலிகளின் போர்க்குரலோசை , புலிகளின்புயலிசையாக , உலகெங்கும்
ஒலிக்கட்டும் . விடுதலை உணர்வுகளில் , சிறந்த நல்ல இலக்கிய கவிதொடுத்து ,
செந்தமிழில் அதற்கு நல்ல இசைகொடுத்து , ஜேர்மனியைக்கடந்து வந்து ,
இலண்டனிலே புலிகளின் குரலை ஒலிக்கும் , ஜேர்மன் தமிழீழப்புலிகளின் கலாச்சார
ப்படையினரையும் , புயலிசைக்க லைஞர்களையும் , வாழ்த்துகின்றோம் .
எந்த மண்ணில் வாழ்ந்தாலும் எங்கள் மண்ணின் நினைவு
களையும் , கனவுகளையும் , உணர்வுகளையும் , மீட்டிவரும் இலண்டன் புலிகளின் கலை
மாலை , சிறப்படைய கனடா வாழ் தமிழ் ஈழ மக்கள் சார்பில் வாழ்த்துகின்றோம்
எங்கள் தேசத்தை மீட்க தேசிய பாதுகாப்புநிதியைக் குவிப்போம் .

தமிழீழ விடுதலைப்புலிகள் ,
ரொறன்டோ கிளை , கனடா .

---

ஓ தாயே- கற்புபெரிதென்றாய்
ஏ சேயே-கற்ககசடறவென்றாய்
இன்று வரை எத்தனையோ அத்தனையும் தவிடுபொடி
கொன்று குவிக்கின்றான் புத்தனின் பெயரைச் சொல்லி

இனியொரு விதி செய்வோம்
தனியொரு நாடென்றால்
இனிமையுடன் வாழ்வோமென
கனிவுடனே தம்பி பிரபாவும்
அவனமைத்த புலிப்படையுடன்
புதுயுகம் காணவென்று
அவனியிலே புரட்சிப்பவனியாய்
புறப்பட்டனர் வீரத்துடன்.

புலிகளின் வெற்றிதனில்
நம்பிக்கை வந்தபின்னே
கிலி கொள்ளும் சிப்பாயை அழிக்க
நம் மக்களும் வீரத்துடன்
தமிழீழமதில் மக்கள் போராட்டம்
தம்பியின் தலைமையிலே மலர்கிறது என
பிரித்தானியா வாழ் தமிழருக்கு லயத்துடனே கூறவென்று

உன் சேய் தொடுக்கும்
புலிகளின் கலை மாலை தனைப்
பனிபடியும் கனடாவிலிருந்து
கனிவுடனே வாழ்த்துகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக் குழு மொன்றியல் கனடா.

படிப்பகம்

www.padippakam.com

கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக ஒடுக்கப்பட்ட இனமொன்று தன் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராட்டத்தை தொடர்ந்து கொண்டிருக்கின்றது

இப்பத்தாண்டுகளுக்கு மேலான தமிழீழப் போராட்ட வரலாறு ஆனது விடுதலைப்புலிகளின் வரலாறுதான்.

இளம்புலிகள் இன்று அணிவகுப்பில் முன்னணியில் நிற்கின்றனர்.

இவர்கள் தம் தாயின் கருவில் இருக்கும் போதே கலவரங்களைக் கண்டவர்கள்.

அரச பயங்கரவாதிகளின் தொடர்ச்சியான அடக்குமுறைகளையும் அதன் கோலங்களையும் இவர்களால் எவ்வாறுதான் ஏற்றுக்கொள்ள முடியும்.

இவர்கள் போராட்டச்சூழலில் வளர்கிறவர்கள்.

போராட்டமே வாழ்க்கையானதால் புரட்சிக்கு வந்தவர்கள்.

இரவில் துப்பாக்கியையும், கைக்குண்டையும் தலையணியின் கீழ் வைத்துவிட்டு தூங்குபவர்கள்.

இவர்கள் நெஞ்சிலே தாங்கும் சயனைட் குமிழ்கள் எதிரி இவர்கள் மீது திணித்த அடக்குமுறைகளை எந்நேரமும் பறைசாற்றும்.

சுருங்கச் சொன்னால் தமிழீழம் உண்மையாகிச் செல்கின்றது.

72 இல் ஒரேயொரு கைத்துப்பாக்கியுடன் தொடங்கிய போராட்டமானது இன்று வடக்கையும், கிழக்கின் சில பகுதிகளையும் தன் கட்டுப்பாட்டினுள் வைக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளது.

தரை மார்க்கமாக தொடர்ந்த விடுதலைப்புலிகளின் போராட்டம் ஆகாயமளவுக்கு உயர்ந்து இன்று கடல் வரைக்கும் பரந்துள்ளது.

பரிணாம வளர்ச்சிகளை பந்தி பந்திகளாய் எழுதத் தேவையில்லை.

இந்த வளர்ச்சி வரலாற்றுக்கு விலையாக இன்று வரை ஏறக்குறைய 200 விடுதலைப்புலிகள் இந்த மண்ணுக்காய் மரணித்துக்கொண்டார்கள்.

இந்த தியாக வரலாற்றுக்கு வெளியே வெளிநாட்டில் வாழும் நாம் எங்கோ தொலை தூரத்தில் நின்று கொண்டிருக்கின்றோம்.

சிறிலங்கா அரசு இன்று வானத்தாலும் வரத்தொடங்கி விட்டது.

புதிய புதிய ஆயுதக்கிடங்குகள் தோண்டப்படுகின்றன.

இந்த அடக்குமுறைகளில் இருந்து எம்மக்களை பாதுகாக்கும் பெரும் பணியில், களத்தில் விடுதலைப்புலிகள் நின்று கொண்டிருக்கிறார்கள்.

கெரில்லாப்போர் மக்கள் போராட்டமாக புதிய வடிவம் பெற்றுச் செல்கின்றது.

பொருளாதாரம், உள்ளூர் உற்பத்தி, சுகாதாரம், அகதிகள் புனர் வாழ்வு, ஆராய்ச்சி என்று எதிலும் விடுதலைப்புலிகள் செயலாற்றிக்கொண்டு இருக்கிறார்கள்.

இவற்றைப் பூரணமாக நிறைவேற்ற விடுதலைப்புலிகளுக்கு பெருமளவு நிதி தேவைப்படுகின்றது.

இதற்கு உதவும் முகமாக விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க பிரித்தானியக் கிளையினர் புலிகளின் கலை மாலை என்னும் நிகழ்ச்சியின் மூலம் நிதி சேகரிப்பதையிட்டு சகோதர அமைப்பான ஒஸ்லோ தமிழர் நலன்புரி மன்றம் — நோர்வே பெரு மகிழ்வு கொள்கின்றது.

www.padippakam.com

கடந்த காலங்களில் விடுதலைப்புலிகளின் கைகளை பலப்படுத்துவதிலும் புலிகள் பற்றிய விசமத்தனமான பிரச்சாரங்களுக்கு மத்தியில் தமிழ் மக்களுக்கு உண்மை நிலையை விளக்குவதிலும் மாணவர் இயக்கத்தினர் கடுமையாக உழைத்து வருகின்றனர்.

இந்த வகையில் அவர்களின் மற்றொரு முயற்சியான புலிகளின் கலை மாலை என்னும் இந்நிகழ்ச்சியானது சிறப்புற ஒஸ்லோ தமிழர் நலன்புரி மன்றம் வாழ்த்துகின்றது.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

---

அன்பின் தோழர்கட்கு,

விடுதலைப் போராட்ட வரலாறுகளில் முதன்மை வகிக்கும் மாணவர் அமைப்புக்களின் வரிசையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பும் தமிழீழப் போராட்ட வரலாற்றில் இடம் பெற எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

உதயம்.

(நோர்வே)

---

கடந்த வருடம் 23-3-85 அன்று சென்னையில் தமிழீழ விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் ஆங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

1. இலங்கை வாழ் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து தேசிய உரிமையை நிலைநாட்டுகின்ற தமிழீழ தேசத்தை அங்கீகரியுங்கள்.

2. தமிழீழ விடுதலைக்காக களத்தில் போராடுகின்ற புரட்சிகர விடுதலை இயக்கங்களை தமிழர் விடுதலை இயக்கமாக அங்கீகரித்து நிபந்தனையற்ற ஆதரவு அளித்திடுவீர் என்ற கோரிக்கைகளை எம் மாணவர் அமைப்பு விடுத்துள்ளது.

அதே வேளை இன்று எல்லா நாடுகளிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்புக்கள் செயல்பட ஆரம்பித்துள்ளதுடன் செயற்பட்டும் வருகின்றனர். இதன் முதற்கட்டமாக விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தின் பிரித்தானியக் கிளையானது கடந்த வருடம் 16-5-85 அன்று இலண்டனில் ஆங்குரார்ப்பணம் செய்யப்பட்டு இன்று மிகவும் வளர்ச்சியுடன் மாணவர் சமூகத்தை தட்டியெழுப்பும் அமைப்பாகவும் ஏனைய மாணவர் அமைப்புக்களுக்கும் வழிகாட்டியாகவும் விளங்கிவருவதுடன், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக விடுதலைப்புலிகளுக்காகவே தமது உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்து செயற்பட்டும் வருகின்றனர்.

தமது உத்தியோகபூர்வ ஏடான SOLT இதழ் மூலம் விடுதலைப்புலிகளின் கொள்கை விளக்கங்கள் போராட்ட அணுகு முறைகள் போன்றவற்றை வெளிப்படுத்திவருவதுடன் தமிழீழப் போராட்டத்தை சித்தரிக்கும் கலைநிகழ்ச்சிகள் தமிழர் பாரம்பரியத்தை காத்து நிற்கும் கலை இலக்கிய விழாக்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் சிறாலங்கா அரசுப் படைகளினால் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீர் கதைகளை மக்களுக்கு திரைப்பட நிகழ்ச்சிகள் மூலம் புகுத்தி அனைத்து மக்களையும் விடுதலையின் பால் இணைத்து வருகின்றனர். விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் பணி மேலும் தொடர்ந்து மாணவ செல்வங்கள் எதிர்காலத்தில் வீரப்புலிகளாக விடுதலைவேங்கைகளாக இலட்சியப்பற்று கொண்டவர்களாக தமிழீழத் தாயகம் மீட்கப்படுவதை தாகமாகக் கொண்டவர்களாக வளர தமிழீழ விடுதலைப்புலிகள் சுவிஸ், தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஆகியன வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்கள். மாணவச் செல்வங்களின் வளர்ச்சிக்கு அனைத்து தமிழீழ தேச பக்தர்களும் தமது முழு ஆதரவுகளையும் வழங்கி அவர்களின் கரங்களை பலப்படுத்துமாறு வேண்டுகின்றோம்.

"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச்சாலைகள் வைப்போம்"

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

படிப்பகம்

www.padippakam.com

# கெரில்லாப்புரட்சிவழி

ஈழம் வெல்லச் செல்லும் பாதை
இடர்கள் நிறைந்ததுதான் தமிழ் ...... ஈழம்
இலக்கை எண்ணிச் செல்லும் போது
எல்லாம் சமவெளிதான். ...... ஈழம்

சாதனைப் பயணப் போர்தனிலே
சாவுகள் நடப்பதுதான்
வேதனைப் புயலைத் தாண்டினாலோ
வெற்றிப் புன்னகைதான் ...... ஈழம்

புலிகள் செல்லும் பாதை என்றும்
புரட்சி நிறைந்ததுதான்
போரில் ஈழம் வெல்வது கெரில்லா
புரட்சி வழிமுறைதான்

...... ஈழம்

ஏரைப் பிடித்து உழும்போது
எதனை நினைத்திருப்பாய்
போரை நடத்திப் போகும்போது
புலம்பல் ஏன் கேட்பாய்.

...... ஈழம்

பாரதப் போரில் தேரதில் இருந்து
சாரதி உரைத்த மொழி
தமிழ் ஈழப்போரில் இறங்கிய உனக்கும்
இதுதான் வேதமொழி.

# வாருங்கள் தமிழரே வாருங்கள்!

வாருங்கள் தமிழரே வாருங்கள் நாம்
வாழ்ந்த தமிழீழம் மீட்க வாருங்கள், வாருங்கள்
சங்கறுக்க வந்தவனை
சங்கரிக்கவே
வெங்களத்தில் வேங்கையெனப்
பாய்ந்து சீறடா
பொங்கியெழு கடலெனவே
புலிகளோடு சேர்ந்து செல்ல ...... வாருங்கள்

வெலிக்கடைச் சிறையில்தமிழ்
வீழ்ந்த தில்லையே
கொலைக்களத்தில் நின்று தலை
குனிந்ததில்லையே

படிப்பகம்

www.padippakam.com

பலிக்களத்தை நோக்கிச் செல்லும்
புலிகளோடு சேர்ந்து செல்ல ...... வாருங்கள்

அன்னை தமிழ் அழுகுரலும்
கேட்கவில்லையா?
மண்ணில் அவள் துயர் துடைக்க
மக்கள் இல்லையா?
இன்னும் என்ன தாமதம்
எழுந்த போரை நோக்குவோம்நாம் ...... வாருங்கள்

கண்ணகி வயிற்றுதித்தோர்
கதறி அழுகிறார்
காற்றில் அவள் ஆடைகளை
தூக்கி எறிகிறார்
மானமுள்ள தமிழ் மகனே
மங்கையர் துயர் துடைக்க ...... வாருங்கள்.

## என்ன குற்றம் செய்தோம்?

வட்டமிடும் கழுகுகளே நில்லுங்கள் ......நாங்கள்
இட்டகுறை என்னவென்று சொல்லுங்கள்
நாட்டுரிமை கேட்டதென்ன குற்றமா? ...... சொந்த
நாட்டை விட்டே ஓடாதது குற்றமா?

செந்தமிழைப் பேசியது குற்றமா? ...... அந்தச்
சிங்களத்தைப் பேசாதது குற்றமா?
புத்த மதம் சேராதது குற்றமா? ......நாங்கள்
புறங்கூறு திருந்ததுதான் குற்றமா?

அரசியலைப் புகட்டியது குற்றமா? ...... புதிய
ஆட்சிவழி காட்டியது குற்றமா?
அகிம்சை மறை ஓதியது குற்றமா? ...... நிலத்தை
அபகரிக்க விட்டதுதான் குற்றமா?

ஒப்பந்தங்கள் செய்ததுதான் குற்றமா? ...... புத்தர்
உபதேசம் கேட்டதுதான் குற்றமா?
துப்பாக்கிகள் ஏந்தாதது குற்றமா? ...... உன்னைத்
துரத்தி மண்ணை மீட்காதது குற்றமா?

கற்பழிக்க விட்டதுதான் குற்றமா? ...... தாயின்
கழுத்தறுக்கப் பார்த்ததுதான் குற்றமா?
கப்பலேறிச் சென்றதுதான் குற்றமா? ...... காலம்
கடந்து போரை நடத்துவது குற்றமா?

# தமிழீழம்

வெள்ளித் தட்டில் அள்ளித் தரும்
அமுதமல்ல எங்கள் தமிழீழம் ...... இதை
சொல்லிச் சொல்லி தூங்கிவிட்டால்
இனியேது எதிர்காலம்

...... வெள்ளி

பச்சைத் தளிர் வாடுதங்கே
பசும் பால் மணங்கள் வாடுதங்கே
வீசு தென்றல் புயலாச்சே ...... வெறும்
வீணர் செயல் அழிவாச்சே ...... வெள்ளி

பொட்டழிந்த பூவையராய் ...... பெண்கள்
கற்பழிந்து ஓடுவதோ
கட்டவிழ்த்த காடையர்கள் ...... கையில்
கன்னி மகள் கசங்குவதோ.

...... ...... வெள்ளி

தொட்ட பணி தொடரட்டுமே ...... எம்மைச்
சூழ்ந்த பணி ஓடட்டுமே
சீறும் புலி பாயட்டுமே......புலிகள்
வெற்றிக்கொடி ஏறட்டுமே.

பொங்கியெழும் புலிகளின் தமிழீழம்
பொட்டும் பூவும் வாழவைக்கும் தமிழீழம்
பட்டுத் தமிழ் பழமை மகிழ் தமிழீழம்
எட்டுத் திசை புகழ்சேர் தமிழீழம்.

# வெற்றி ஆராதனை

வெற்றி ஆராதனை புலிகள்
ஆலோசனை
வென்று கொடி நாட்டவே ஈழம்
பெறும் யோசனை
என்றும் இதைத் தேடியே புலிகள்
பெரும் சாதனை
இதற்காகவே அவர்
தொடர் சோதனை.

...... வெற்றி

www.padippakam.com

நாம் வாழ்ந்த நாடென்றும் நமக்காகவே
ஏன் இன்று பிறர்வந்து இடம்கொள்ளவே
ஏன் ஏன் ஏன் என்று கேள்வியிது
போர் போர் போர் புலிகள் முழக்கமது
முழங்கால் வரை நனைந்தபின்னே முக்காடெதற்கு
தமிழீழம் காணுது தூக்கம் எதற்கு
இது சத்தியம் இது சத்தியம் சரித்திரத்தில் எழுதுவோம்
தமிழீழ சுதந்திரம்.

...... வெற்றி

போர்வென்ற தமிழ்க்குலம் நமதினமே
நேர்நின்று போரிடும் வீர் நெஞ்சமே
நாம் நாம் நாமென்றும் வாழ்ந்திடவே
தாம் தாம் தாமும் புலிகள் தோழரென்று
தோளோடு தோள் சேர்ந்து போராடுங்கள்
தாராள மனதோடு பொருள் தாருங்கள்
அது லட்சணம் உங்கள் லட்சியம் சரித்திரத்தில் எழுதுவோம்
தமிழீழ சுதந்திரம்.

...... வெற்றி

# வீரக்கவிதை

கோட்டையில் செங்கொடி
ஏற்றிடும் நாளில்
பாட்டுக் குரல் கேட்கும் ...... தமிழ்ப்
பாட்டுக் குரல் கேட்கும் ...... ஈழ
நாட்டையே விடுவித்த தம்பியைப் புகழ்ந்து
ரோட்டில் வெடி கேட்கும்!

மத்தாள மேளங்கள் கொட்டி முழங்கிட
மக்கள் குரவை எழும்! தமிழ்
மக்கள் குரவை எழும்! அந்த
வித்தாரச் சிங்களம் வீழ்ந்த கதை கூறி
வீரக் கவிதை எழும்! தமிழ்
வீரக் கவிதை எழும்!

செந்தமிழ் நாட்டின் படைபலம் எல்லையில்
சீறிச் சினந்திருக்கும்! ...... எங்கும்
சீறிச் சினந்திருக்கும்! ...... அந்தப்
பொல்லாத சிங்களம் பூர முடியாமல்
பூட்டுக் கதவிருக்கும்! ...... படைப்
பூட்டுக் கதவிருக்கும்!

படிப்பகம்

www.padippakam.com

# IMMEDIATE HOME MORTGAGES AVAILABLE

UP TO 100% (SUBJECT TO STATUS)
LOANS_COMMERCIAL OR FOR A SECOND HOME
OTHER SERVICES INCLUDE

LIFE AND PENSION
Policies

SHOP and COMMERCIAL
Insurance Cover

MOTOR INSURANCE
Competitive Rates
Instalments. BIA & Lloyds

HOME INSURANCE
Low cost Endowment
Policies

SPECIALISTS FOR
HIRE & REWARD
(for private hire)
-Monthly basis

Bainbridge for
prompt & reliable
service

**Bainbridge**
Insurance Services Limited

* Local Agents For:

*HEAD OFFICE
78 Green Street,
London E7 8JG
01-471 3350
01-471 1866
01-472 2063

157A Hartfield Road
Wimbledon,
London SW19 3TJ
01-543 5181

*214 Hither Green Lane,
London SE13
01-852 8397

BAINBRIDGE
FREEPOST
LONDON E7 8BR.

படிப்பகம்

www.padippakam.com

# ARE YOU REALLY AS GOOD A PARENT AS YOU THINK?

(THE ODDS ARE 9 TO 1 AGAINST)

ARE YOU A LOVING PARENT! PROVIDING FATHER! HARD-WORKING MOTHER.

WELL!

HOW MUCH A WEEK WOULD YOUR FAMILY NEED TO PROTECT THEIR STANDARD OF LIVING?

£100 £125 £150 £175 £200 £225 £250....

GETTING THE ANSWER WRONG COULD BE FINANCIALLY DISASTROUS

FOR YOUR FAMILY

## STATE BENEFITS

WIDOW'S ALLOWANCE(PAID WEEKLY)

FIRST 26 WEEKS-£53.60 AFTER 26 WEEKS-£38.30

AND ALLOWANCE FOR EACH CHILD-£8.05

## DEATH GRANT(LUMP SUM)

DEPENDENT OF THE PERSON WHO HAS DIED BUT NORMALLY-£30.00

## ONE PARENT BENEFIT(PAID WEEKLY)

ADDITIONAL TO CHILD BENEFIT BUT LIMIT TO THE FIRST OR ONLY CHILD-£4.45

WE CARE FOR REAL NEEDS OF REAL PEOPLE DYING TOO SOON OR LIVING TOO LONG. THE FINANCIAL BURDEN CAN BE AVOIDED TOMMORROW MAY BE TOO LATE!

RING FOR PERSONAL - PROFESSIONAL ADVICE
K.KAMAL NATHAN,ABBEY LIFE
ABBEY LIFE ASSURANCE COMPANY LTD
RAVENSCOURT OFFICE(HOUNSLOW BRANCH)23A,HIGH STREET
EALING,LONDON W5 5DF
TEL:01-567 6677;01-471 3608

ALSO DEAL WITH MORTGAGES,PERSONAL LOANS,PARTABLE PRIVATE PENSION SCHEMES,FUNDS FOR CHILDREN'S PRIVATE EDUCATION,CAPITAL TRANSFER TAX,CAPITAL GAIN TAX ETC.

---

I AM INTERESTED IN

-- MORTGAGES -- PERSONAL LOANS -- PRIVATE PENSION SCHEME
-- FUNDS FOR CHILD NEEDS -- LIFE ASSURANCE PROTECTION FOR MYSELF & MY FAMILY
-- CAPITAL TRASFER TAX -- CAPITAL GAIN TAX

MR/MRS/MISS
NAME:--------------------------------
ADDRESS:--------------------------------
--------------------------------
--------------------------------
--------------------------------
TEL:--------------------------------

படிப்பகம்

www.padippakam.com

அன்று முதலெங்கள் இது கொள்கை
வென்று எடுப்பது தமிழீழம்
நின்று பொறுத்தது போதுமினி
நேருக்கு நேர்நின்று கொன்றுகுவி. ..... எங்கள்

நெற்றிக் குங்குமம் நிலைத்திடவே
நேசக்கரங்கள் இணைந்திடவே
பாசக் குழந்தைகள் பிழைத்திடவே
புலிக்கொடி பறக்கும் காலம் வரும்
புலிக்கொடி பறக்கும் காலம் வரும்
புண்ணிய செந்தமிழ் ஈழத்திலே
புண்ணிய செந்தமிழ் ஈழத்திலே. ..... எங்கள்

# தமிழீழ விடுதலைப் புலிகள்



செங்குருதி பாயும் தமிழீழத்திலே
செந்தமிழன் கொடி ஏறிடுமே
சொத்தெனத் தாயகம் கிடைத்திடுமே
சத்தான தமிழீழம் மலர்ந்திடுமே
வித்தான புலித்தோழர் அத்திவாரத்திலே
முத்தான புலிக்கொடி ஏறிடுமே.

தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழ் காத்த உயிரெனும் மணிகள்
தலைசாய்க்கா சரித்திரக் கனிகள்
அலை ஓயாக் குமிறிடும் கடல்கள். ..... தமிழீழ

பேச்சுடன் இல்லை முழுவதும் செயல்கள்
மூச்சு நின்றாலும் பெறுவது ஈழம்
போச்சடா என்று போனது இல்லை
பொங்கி எழுந்து சாய்ந்தது இல்லை
பங்கு பிரித்தே ஓய்வது என்று
பகலிரவாகப் போரிடும் எங்கள். ..... தமிழீழ

ஆண்ட பரம்பரை அண்டிட இங்கு
ஆண்டுகள் பல பல தாண்டியதென்று
ஆணுடன் பெண்ணும் மூண்டு எழுந்து
மூடுபனிகளும் ஓடிமறைந்து
நாடுபிரித்தே நாமயர்வோமென்று
கோடுகிழித்தே எல்லைகள் தேடும். ..... தமிழீழ

படிப்பகம்


www.padippakam.com



FOR THE FIRST TIME IN LONDON
THE GREAT CUISINES OF INDIA
ORIGINALLY PRESENTED

# THE INDIA BRASSERIE

FULLY LICENSED INDIAN CUISINE




127-129 UXBRIDGE ROAD
WEST EALING, LONDON, W.13
TELEPHONE:
01-567 6211 & 01-579 1973
&
25TH AVENUE, WEST EALING, LONDON W.13
TELEPHONE:
01-9912202 & 01-9976123


The India Brasserie

OPEN: 12 noon -2.30 p.m & 6 P.M -midnight


THIS RESTAURANT WAS OFFICIALLY OPENED BY THE WORSHIPFUL MAYOR & MAYORESS OF EALING-COUNCILLOR ROBERT HETHERINGTON & MRS. JOY HETHERINGTON ON 10TH AUGUST, 1983



SUPERBLY LOCATED-
THE INDIA BRESSERIE A MOST LUXURIOUS INDIAN RESTAURANT JUST A FEW MINUTES WEST OF HANGER LANE.....
.....OFFERS YOU THE BEST IN INDIA CUISINE FANTASTIC ATMOSPHERE, SUPERB SERVICE AND VERY FRIENDLY HOSTS.



* BACKGROUND MUSIC.



# LUXMY VIDEO CLUB

303-301A HIGH ROAD, WILLESDEN
LONDON NW10
TELEPHONE: 01-451 1646

TAMIL VIDEO FILMS AVAILABLE FOR SALES AND RENTALS

WE HAVE A LARGE AMOUNT OF DIFFERENT VARIETIES NEW & OLD TAMIL FILMS

படிப்பகம்

www.padippakam.com


வீடியோ உலகில் மேல்ஓங்கி நிற்கும் கலை நிறுவனம்

# EURO TAMIL VIDEO FILM SOCIETY

PROUDLY ANNOUNCES THE OPENING OF A ONE STOP SHOP & SHOW ROOM AT:

## EURO

316-318 HIGH ROAD, WILLESDEN
LONDON NW10 2EN
TEL. 01-459 8589 & 01-451 2902

SPECIAL OFFER
-------------
* HIRE THREE FILMS AND PAY FOR TWO
* FIVE PYRAMID AUDIO TAPES FOR ONLY £8.00 (1.60 EACH)

FOR YOUR

* TAMIL FILMS
* ENGLISH FILMS
* NEWS AGENTS
* PHOTO PROCESSING FACILITIES
* GROCERIES
* TOBACCONISTS
* PHOTO COPYING
* SPECIALITY PRODUCTS ETC.

SOLE DISTRIBUTORS FOR PYRAMID & EURO VIDEO FILMS & PYRAMID AUDIO CASSETTES

NEW OPENING HOURS FOR YOUR CONVENIENCE
PAY US A VISIT AND LET SERVE YOU

OUR OTHER TAMIL VIDEO RENTAL BRANCHES ARE:

62 ELTHORNE AVE
HANWELL, LONDON W7
TEL. 01-579 3103

27 UNDERCLIFF ROAD
LEWISHAM, LONDON SE13
TEL. 01-691 8872


படிப்பகம்

www.padippakam.com

# ஏற்றுவாய் தமிழ் ஈழத் தீபம்-

என் மகனே என் மகனே
என் நிலையைப் பார் மகனே
நீ எழுந்தால் புயல் அடங்கும்
நிறை மதிபோல் தமிழ் விளங்கும்-

.....என்

அடிமை இருளில் மனம் வாடுதடா
கொடுமை அரசு துயரைக் கூட்டுதடா
அடிவானில் இடி முழக்கம் கேட்குதடா
விடியலை வேண்டித் தீயை மூட் டுதடா-

.....என்

கல்லான உன்மனதும் கரையவில்லையோ
கண்ணீரைத் துடைக்க மனம் வரவில்லையோ
துள்ளியெழும் புலிக்குதவ மனம் இல்லையோ
துப்பாக்கி ஏந்த நெஞ்சில் துணிவில்லையோ-

.....என்

காற்ருேடு என் ஆவி கலக்கு முன்னே
சேற்ருேடு என் உடலும் சேருமுன்னே
ஊற்ருேடு என் ஊனும் ஓடு முன்னே
ஏற்றுவாய் தமிழ் ஈழத் தீபம் கண்ணே-

.....என்

# அன்புத் தம்பிக்கு....

சிந்திக்கத் தொடங்கிடுடா தம்பி
செயல் படத் தொடங்கடா தம்பி
சிந்தை உயர்ந்தவண்டா தம்பி
சேருவாய் அவனையே நம்பி.

-சிந்தி...

கொதிக்கின்ற வயதோடிப் போனுல்
கூன் பிறை வயதாகிப் போவாய்
இதற்குள்ளே பல்லாண்டு போனுல்
எங்கேடா தமிழ் ஈழம் காண்பாய்

-சிந்தி...

சுக்கானை அவன் கையிற் கொடுப்போம்
துடுப்பினை நாம் கையில் எடுப்போம்
சிக்கல்கள் உடையத் தொடுப்போம்
சீக்கிரம் ஈழம் வென்றெடுப்போம்

-சிந்தி...

படிப்பகம்

வில்லிருந்து பாயுமோர் அம்பாய்
விரைந்திடு களத்தினில் முன்பாய்
வல்ல தமிழ் ஈழத்தை நன்று
வாழ வைப்போம் போரிலே வென்று

-சிந்தி...

# தமிழ்த்தாயின் கதை....

என் அன்னை அடிமைக் கூண்டினிலே
இதயங்களோ புயல் காற்றினிலே
என் அன்புக் குழந்தைகள் ரேட்டினிலே
ஏங்குகின்றேன் தமிழ்ப் பாட்டினிலே

(என்)

கன்றை இழந்ததோர் தாயின் கதை
கண்ணீர் வடியும் சோகக் கதை
என்றும் மாறுத் துயரக் கறை
ஏங்குதம்மா அந்தத் தாய்ப் பறவை.

(என்)

செந்நீர் சிந்திய திருவடிகள்
தீயினுள் வாடிய சிறுமலர்கள்
அன்னை மண்ணை மீட்பதிலே
அலையுதம்மா தமிழ் ஈழத்திலே.

(என்)

கல்மனச் சிங்களக் கொடுமைகளை
கல்லறை சொல்லுது ஏக்கங்களை
முள்வலை சூழ்ந்த எல்லைகளை
முறித்திடப் போர்க்களம் செல்லும் பிள்ளை

என்)

# அன்னை துயரைத் தீரடா !

ஆரிரராராரோ ஆராரோ ஆரீரோ ஆரீரராராரீரோ.....
சின்னஞ் சிறிய புலிக்குட்டி----என்
சிந்தை இனிக்கும் செல்லக்குட்டி.

துள்ளித் திரியும் போது நீயும்
துவக்கு ஏந்த வேண்டுமே
அன்னை தமிழை அழிப்போர் தம்மை
அடிமையாக்க வேண்டுமே !

www.padippakam.com

சங்கம் வளர்த்த தமிழின் அமுதை
கொங்கை மூலம் அருந்தடா.
சிங்களத்தின் தீமை வெல்ல
சங்கநாதம் எழுப்படா !

புலியின் கொடியை ஏந்தி நீயும்
போர் புரிந்து காட்டடா.
அழிவின் விளிம்பில் அழுந்தும் உந்தன்
அன்னை துயரைத் தீரடா !

# தூக்குவோம் துவக்கையே-

தூக்குவோம் துவக்கையே துயரினைத்துடைக்கவே !
துட்டகைமுனுக்களை சுட்டுவீழ்த்தவே !!

முந்தி வாழ்ந்த தமிழர் மானம்
உனக்கு இல்லையா?
முத்தமிழர் சொன்ன வீர
மூச்சும் இல்லையா?
அன்னை தமிழ் பாலருந்தி
வாழ்ந்த தில்லையா?
அடிமையாக வாழ்கிறாயே
வெட்கமில்லையா?

(தூக்குவோம்)

சேர சோழ பாண்டியர்
புகழ்ந்த மண்ணிலே
சிங்களத்து தீனர்கொடி
போட்டு மகிழ்வதா?
பச்சை ரத்தம் ஆமிப்படை
பருகவிடுவதா?
பாலகரை தீ மழைக்குள்
வேக விடுவதா?

(தூக்கு வாம்)



படிப்பகம்

www.padippakam.com

# புலிபாய்ந்து வருகின்றதே....

புலிகளின்தாகம்
தமிழீழத்தாயகம்.
புலி பாய்ந்து வருகின்றதே----வீரப்
புலி பாய்ந்து வருகின்றதே.

போராட்டம் எனும் இன்பத்
தேரோட்டம் தனில் ஏறிப்----புலி

தமிழ்த்தாயின் தடைக்கல்லை
உடைத்தாளப் புவி மீது----புலி

தனிநாட்டுக் கொடி போட்டு
படைகூட்டி முடி சூட்ட----புலி

உனக்காக புது வாழ்வை
உருவாக்கித் தரவென்று----புலி

மக்கள் பேர் அணியாக
வளர்ந்திட்ட கெரில்லாவாய்----புலி

# மானத்தமிழன்

மானத் தமிழன் மதியுடை புதல்வன்
தானைத் தலைவன் தம்பிபடை கண்டால்
வானம் சிவக்கும் வையம் சிவக்கும்
கானகம் எங்கும் கனலாய் வெடிக்கும்.

மாரி மழை போல குண்டை
வாரி வீசி ஈழ மண்ணை
பாரில் வென்று காட்டுவோமடா----இதை
யார் தடுப்பார் என்று கேளடா.

வேட்டொலியைக் கேட்டவுடன்
காட்டெருமைக் கூட்டமெங்கள்
நாட்டை விட்டே ஓடும் பாரடா----கூலிக்
கோட்டான் விடை கேட்கும் பாரடா.

நண்டு மொழிக் கூட்டங்களின்
மண்டை சிதறுண்டு மண்ணில்
துண்டு துண்டாய் விழும் பாரடா----இதைக்
கண்டு தடுப்போனும் யாரடா.

படிப்பகம்

www.padippakam.com

# A NATION IS BLEEDING!
# IT NEEDS ALL HELP TODAY!
# NOT TOMORROW!



THERE IS NO SUBSTITUTE TO TAMIL EELAM




Liberation Tigers Of
TAMIL EELAM

PLEASE HELP US TO ACHIEVE IT

படிப்பகம்

www.padippakam.com

## STANDING ORDER

To The Manager,
Bank:......................................................................

BRANCH:....................................................................

ADDRESS:...................................................................

...........................................................................

Dear Sir,

Please pay to the account of SOLT. Account No:27807177 National Westminster Bank Plc, Branch Code 60 70 02, Elephant & Castle Branch, 125 Newington Cause Way, London SE1.

A sum of....................Pounds(£..........)as donation on the ................day of the month from .................198

Name :.....................................................................

Account No:................................................................

Address:...................................................................

...........................................................................

Date :......................Signature of donor :.................

---

## SOLT

Standing order ref:....................TelNo:....................

Name of donor:.............................................................

Address:...................................................................

...........................................................................

Name of donor's Bank:......................................................

Branch name:...............................................................

Branch code:...............................................................

Address:...................................................................

...........................................................................

Monthly donation:..........................................................


Commencing date:...........................................................

Please send this form to SOLT ,BM BOX 3694,LONDON WC1 N3XX.

code:......................................................................

படிப்பகம்

www.padippakam.com



# MUTILATION OF A NATION



J. R. JAYAWARDENE
FASCIST DICTATOR
OF SRILANKA



GENOCIDE OF TAMILS IN SRILANKA
INNOCENT VICTIMS OF AERIAL BOMBARDMENT

STUDENT S ORGANIZATION OF
LIBERATION TIGERS OF TAMIL EELAM

படிப்பகம்

www.padippakam.com



தமிழீழத்
தனியரசே
எமது அசைக்க
முடியாத
இலட்சியம்.
இந்த
இலட்சியத்தை
அடையவே
நாம் உயிரை
அர்ப்பணித்துப்
போராடி
வருகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன்

படிப்பகம்

www.padippakam.com


# PRABAKARAN APPEALS FOR NATIONAL DEFENCE FUND

*In an urgent appeal to Tamils of Eelam and abroad, Mr Prabakaran, leader and military commander of the Liberation Tigers of Tamil Eelam, has requested funds for a national defence programme. He emphasised the urgency and necessity of protecting the civilian population during phases of a war of national liberation. The L.T.T.E., he said, has mooted a National Defence Fund for the purpose of implementing the programme of civil defence.*

## தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன்

எனது அன்பான தமிழீழ மக்களே!

விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகா அரசியல் பாதை. கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதை. வியர்வை சிந்தி, இரத்தம் சிந்தி, தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப் பெறுவது தான் சுதந்திரம். சுதந்திரம் இல்லாமல் மனித வர்ழ்வில் அர்த்தமேயில்லை. நாகரீகம் தோன்றிய காலம்தொட்டு இன்று வரை, சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக ஒடுக்கப்பட்ட மனித சமூகங்கள் போராட்டங்களை நடத்தியிருக்கிறது, யுத்தங்கள் புரிந்திருக்கிறது, புரட்சிகள் செய்திருக்கிறது. சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகிறது. இந்த சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் நிம்மதியாக வாழ முடியாது. சமாதானமாக சந்தோசமாக வாழ முடியாது. சுதந்திரத்தை வென்றெடுக்காதுபோனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும், தன்மானமிழந்து தலைகுனிந்து வாழவேண்டும், பயந்து, பயந்து பதட்டத்துடன் வாழவேண்டும், படிப்படியாக அழிந்துபோக வேண்டும். ஆகவே **சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமில்லை.**



நாம் போருக்குத் தயாராக வேண்டும். அடிமைகளாக வீழ்வதைவிட போராடி வாழ்வதே மேன்மையானது என்ற இலட்சிய உணர்வோடு நாம் ஆயுதம் ஏந்தத் தயாராகவேண்டும். ஈழத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும விடுதலை வேங்கைகளாக, வீரப் புலி இனமாக மாறவேண்டும். விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்புண்டு.

இந்த நெருக்கடியான காலகட்டத்தில் முழு சமுதாயமுமே பேரழிவை எதிர்நோக்கிய இச்சூழ்நிலையில் எம் மத்தியில் சுயநலவுணர்வுகள் களையப்பெற்று சமூகவுணர்வு, இனவுணர்வு பிறக்கவேண்டும். பணத்தை முடக்காமல், உணவு பண்டங்களைப் பதுக்காமல், தான் வாழ்ந்தால் போதும் என்ற தன்னலம் கருதாமல் வசதிபடைத்தோர் வசதியற்றோருக்கு உதவவேண்டும். பணம் படைத்தோர் பட்டினி கிடப்பவர்களுக்கு உதவவேண்டும். இது ஒரு தேசிய நெருக்கடி, இந்நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத் தேசிய இனமுமே பகிர்ந்துகொள்ள வேண்டும். இந்த தேசிய சுமையை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைகள் மட்டும் தாங்கிக்கொள்ள அனுமதிப்பது நாம் எமது தேசத்திற்குப் புரியும் துரோகம் என்றே சொல்லவேண்டும்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். **தமிழீழம் என்றோ ஒரு நாள் உதயமாவது திண்ணம். சமதர்ம சமூகமாக எமது நாடு வளம் கொளிப்பது திண்ணம்.**

**இந்நம்பிக்கையில் ஆன்ம உறுதி தளராது விடுதலைப் பாதையை நோக்கி வீறுநடை போடுவோமாக.**



புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

படிப்பகம்

www.padippakam.com

*Published by:*

**Students Organisation of Liberation Tigers (U.K.)**

**B.M. Box No. 3694, London WC1 N3XX**
**Telephone: 01-475 0356**
**01-475 0543** – (Voice of Tigers)

**Rendox Angel Press**

நிறுவனத்தினால் அச்சிடப்பட்டது.

64/66 Church Road, Manor Park, London E12 6AF
**Telephone: 01-514 0332**

படிப்பகம்

www.padippakam.com


# M.S. NAVA & Co Ltd

★ Life Insurance ★ Pensions ★ Mortgages
★ Motor Insurance ★ House Contents
★ School Fees & ★ Travel Insurance

## HOUSE MORTGAGES ARRANGED!

Have You thought of buying a House for yourself?
If you already have one; have you thought of
investing in a secondProperty?
Come to us for Speedy & Specialist Mortgage Services.
We arrange Conveyancing Professionals at Competitive Fees.

## HOUSE CONTENTS INSURED!

Have You Covered Your Valuables & Jewelleries
against Fire, Theft & other Damages?
We have Special Links with leading Insurance
Companies for House Contents Insurance.

63 CRAIGEN AVENUE
SHIRLEY PARK
CROYDON CRO 7JQ
TEL: 01-654 8682, 656 5987

SOUTHBRIDGE HOUSE
SOUTHBRIDGE PLACE
CROYDON CRO 4HA
TEL: 01-680 9787



Member of:
NCC
The National Computing Centre

# LONDON ACADEMY OF COMPUTING AND ELECTRONICS

LACE

FULL TIME COURSES ARE AVAILABLE IN THE FOLLOWING SUBJECTS:-

DIPLOMA COURSES IN COMPUTER STUDIES

ASSOCIATION OF BUSINESS ADMINISTRATIVE COMPUTING

| | | | |
|---|---|---|---|
| CERTIFICATE | 1 YEAR | SANDWICH | £650.00 |
| DIPLOMA | 1 YEAR | SANDWICH | £650.00 |
| L.A.C.E BUSINESS COMPUTING DIPLOMA | 1 YEAR | SANDWICH | £525.00 |
| SECRETARIAL SKILLS CERTIFICATE | 1 YEAR | SANDWICH | £345.00 |

ACCOUNTING AND BANKING COURSES

| | | | |
|---|---|---|---|
| AAT ACCOUNTING TECHNICIAN | 3 SIX MONTH | PART | £345.00 |
| AIB BANKING | 3 SIX MONTH | PART | £345.00 |

ENGLISH FOR FOREIGN STUDENTS

| | | | |
|---|---|---|---|
| EFS PART 1 & 2 | 2 SIX MONTH | PART | £450.00 |

ALL COURSES CONFORM TO HOME OFFICE REQUIREMENTS

41, Trinity Road,
London SW17 7SD

FOR FURTHER DETAIL & APPLICATION FORM CONTACT :
THE REGISTRAR Ms.S.L.AIREY
AT THE COLLEGE ADDRESS

66, Upper Tooting Road
London SW17 7DB
Tel : 01-767 4698


படிப்பகம்

www.padippakam.com


# VANEE AGENCY

**We Are Renowned World Wide For :**

**Excellent Service** **Wide Popularity**

**Sales & Rentals**

- Superb Range
- Tamil Records From India
- Over 2050 Tamil Film Video Titles
- Audio Cassettes Over 20 000 Diff. Titles

*GRAND SELECTION NEW & OLD*

*FAMILY DEVOTIONAL DOCUMENTARIES ENTERTAINMENT*

**Full Wedding Services Available - Tamil Oriented**

Bridegroom's Requirements * Bride's Requirement

Complete Wardrobe, Jewellery, etc

FOR SALE OR HIRE

ALSO BIRTHDAY ANNIVERSARIES & ALL OCCASIONS CATERED FOR

We Will Video Record The Most Important Day In Your Life

FOR YOUR DINING TABLE & PARTIES

Packed Food Ready To Eat - Vegetarian & All Tastes

FOR SALE : All Kinds Of Tamil Eelam Style Chilli Powder , Rice Flour, Gingely Oil, Ghee

Whate We Haven't In Stock We Can Deliever Your Order Within A Fortnight

**Feel At Home In Our Traditional Style Shop**

*MANY VARIETIES & HUNDREDS OF ARTICLES*

**Handicrafts Statues Beautifully Made In Brass & In Synthetics**

OUR TRAVEL SERVICES ARE THE BEST AT VERY COMPETITIVE PRICES

All Airlines & All Destinations

Please Ring Or Call Us For Cataloques

317A High Street North
Manor Park
London E12 6SL

Telephone: 01-471 8366
Telex: 898160


*Published by:* **Students Organisation of Liberation Tigers (U.K.)** *Printed by:* **Rendox Angel Press Telephone: 01-514 0332**